## வெளிநாடுகளில் பணிக்குச் சென்று சிக்கிய 1,685 பேர் மீட்கப்பட்டு தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்!

# மறுவாழ்வு மையங்களில் வாழ்வோருக்கு பல்வேறு திட்டப் பணிகள் - வளர்ச்சிப் பணிகள்!

## பேரவையில் பொது (மறுவாழ்வு)த்துறை - வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பதிலுரை!

**சென்னை, ஏப்.22 -**

**சட்டப்பேரவையில் பொதுத்துறை - மறுவாழ்வு - வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பதிலளிக்கையில், வெளிநாடுகளில் பணிக்குச் சென்று சிக்கிய 1,685 பேர் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்றும், மறுவாழ்வு மையங்களில் வாழ்வோர்க்கு பல்வேறு திட்டப்பணிகள், வளர்ச்சிப் பணிகள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.**

பொதுத்துறை- மறுவாழ்வு-வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் அளித்த பதிலுரை வருமாறு:-

அவை முன்னவர் அவர்கள் இட்ட கட்டளையை ஏற்று, இங்கே புகழாரம் என்பதை என்னுடைய வாழ்த்துரையில் நிறுத்தி, பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளடங்கிய அனை வருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை எண் 38 பொதுத்துறை, மறுவாழ்வு துறை, வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை சார்பாக பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த, அன்று, முத்தமிழறிஞர் கலைஞருக்கு தளபதி; இன்று, தளபதிக்கு உதயநிதி. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி; தந்தை மகனுக்குச் செய்யும் நன்றி என்பதைச் சொல்லி, பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மண்ணுக்கும் ஒரு மணமும், ஒரு நிறமும் இருப்பதைப்போல ஒரு தத்துவமும் இருக்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழருக்கான தத்துவம்.

உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவரும் நம் உறவினரே என்பதை ஏற்றுக்கொண்ட தமிழர் கடல் கடந்து சென்று குடியேறிய நாட்டையும் தங்களுடைய தாய் நாடாகவே கருதினர். அந்த நாட்டின் காடு, மலைகளைத் திருத்தி, இரயில் தண்டவாளங்களை அமைத்து, அந்த நாட்டின் பூர்வீக குடிகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், பண்பாட்டு மேன்மைக்கும் தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த மொரீஷியஸ், ரீயூனியன், சீஷெல்ஸ் ஆகிய தீவுகளுக்கு தமிழர்கள் அழைத்து செல்லப்பட்டு 294 ஆண்டுகளாகின்றன. இலங்கைக்கு தமிழர்கள் அழைத்து செல்லப்பட்ட 200 ஆம் ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டில் நடைபெறவுள்ளது. இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஜாவா, சுமத்ரா தீவுகளை சோழ மன்னன் இராஜராஜ சோழன் வெற்றி கொண்டு 1,000 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. வெற்றி பெற்ற நாடுகளையெல்லாம் அடிமை காலனி நாடுகளாக மாற்றும் எண்ணம் இருந்திருந்தால், இன்று தென்கிழக்கு ஆசிய நாடுகளெல்லாம் தமிழ் பேசும் நாடுகளாக இருந்திருக்கும். ஆனால், யாரையும் அடிமைப்படுத்த விரும்பாத தமிழரின் மனநிலையால் 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் வெற்றி கொண்ட நாடுகளில் இன்று வரலாற்று எச்சங்களை மட்டுமே நாம் காண்கிறோம். தமிழர்கள் உரிமைகளை மறுத்து கடல் கடந்து கொண்டு செல்லப்பட்டிருந்தாலும், அவர்களின் வாரிசுகள் இன்று அந்த நாடுகளை ஆளுகின்ற அளவிற்கு உயர்ந்துள்ளனர். சென்றடைந்த நாடுகளை திருத்தி செம்மையாக்கி, அந்தந்த நாடுகளின் பூர்வக் குடிகள் போல அந்த மண்ணுடன் ஐக்கியமாகி உள்ளனர்.

**வெளிநாடு தமிழர்களின் நலன்**

வெளிநாடுவாழ் தமிழர்களின் நலனில் முதலமைச்சர் அவர்கள் அக்கறை கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "தமிழர்களே, தமிழர்களே என்னை கடலில் தூக்கிப் போட்டாலும் நான் கட்டுமரமாகத்தான் மிதப்பேன்; அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம்" சொன்னதன் அடிப்படையில், தமிழக முதல்வர் தளபதி அவர்கள், தமிழ்நாட்டிற்கு வெளியே இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வாழுகின்ற தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு இயற்றிய வெளிநாடுவாழ் தமிழர் நலச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்த அயலகத் தமிழர் நல வாரியத்தை 2022 ஆம் ஆண்டில் 16 உறுப்பினர்களைக் கொண்ட வாரியமாக கட்டுருவாக்கி, கடலால் பிரிந்த சொந்தங்களை அன்பினால் ஒன்றிணைத்தார். வேலைவாய்ப்பு களுக்காகவும், தொழில் புரியவும், உயர் கல்வி கற்கவும் தமிழர்கள் கடல் கடந்து செல்லுவது தொடர்ந்து இன்றும் நடைபெறுகிறது. இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், இவர்களுக்காக குரல் கொடுக்கவும் தமிழ்நாட்டில் பாதுகாப்பு அரணாகத் திகழ்கின்ற வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம், வெளிநாடு செல்வோர் குறித்த தரவுகளை ஏற்படுத்தி, பதிவுகள் செய்து, அடையாள அட்டை வழங்கி, காப்பீட்டு வசதியை உறுதி செய்து, அயல் நாட்டுக்குச் செல்வோ ருக்கான முதற்படியை எளிமையாக்கிக் கொடுக்கிறது.

அயல் நாட்டிற்கு பணியின் நிமித்தம் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்களுக்கு இன்னல் நேர்ந்தால், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவும் வகையில், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்குதல் முதலிய பணிகளையும் இவ்வாரியம் மேற்கொள்ளும். அயலகத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு ஆலோசனைகள் வழங்க கட்டணமில்லா தொலைப்பேசி வசதி ஏற்படுத்துதல், வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகளை ஏற்படுத்துதல், குடியேறிய நாடுகளில் தேவைப்படும் நேரங்களில் சட்ட உதவிகளை வழங்குதல் போன்ற சேவைகளும் இவ்வாரியத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

**அயலகத் தமிழர் தினம்!**

பண்பாடு மற்றும் அறிவுசார் நிகழ்ச்சிகளை ஊக்குவிக்கவும், தமிழ்நாட்டில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பினை அங்கீகரிக்கவும், ஒவ்வோராண்டும் ஜனவரி மாதம் 12 ஆம் தேதியை அயலகத் தமிழர் தினமாக கொண்டாட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையடுத்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் அயலகத் தமிழர் தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்கள் நேரடியாகவும், இணையவழி மூலமாகவும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த ஆண்டு சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற "உலகெங்கும் தமிழ்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழாவில் 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் அரசியல் பதவிகளில் பங்குபெற்றோர், தற்போது பதவியில் உள்ளவர்கள், தமிழ்ச் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோருடன் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் புலம் பெயர்ந்து அயல்நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு தரவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படும். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள், தாய் தமிழ்நாட்டில் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம் ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்படும். அதேபோல், அயல்நாடுகளில், வெளி மாநிலங்களில் பணிக்குச்சென்று எதிர்பாராதவிதமாக இறந்து விடும் தமிழர்களின் குடும்பங்களுக்கு மாத ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்பதும், அயல்நாடுகளுக்குச் செல்வோர் குறித்த தரவு தளம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று முத்தாய்ப்பான நான்கு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேமதுர தமிழோசை திசையெல்லாம் பரவ வகை செய்ய வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் பயிற்றுவிக்க ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இணையவழியில் எளிய தமிழில் பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது.

**துபாயில் தீ விபத்தால் பலியானவர்களுக்கு அஞ்சலி**

15—04-2023 அன்று துபாயில் டேரா என்ற பகுதியில் பணிபுரிந்து வந்த கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ராமராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த 43 வயதான இமாம் காசிம் மற்றும் 49 வயதான குடு என்ற முகம்மது ரபீக் ஆகியோர் தீ விபத்தில் இயற்கை எய்திய செய்தி அறிந்து இறந்தவர்களின் உடல்களை தமிழ்நாட்டிற்கு விரைவில் கொண்டு வந்து பூத உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதின் அடிப்படையில் நேற்று இறந்தவர்களின் சொந்த ஊரில் பூத உடல்களை உறவினர்களிடம் ஒப்படைத்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கியது பதிவு செய்கிறேன்.



பஹ்ரைன்க்கு வேலைக்குச் சென்று அங்கு 4 மாதங்களுக்கு முன்னர் நடந்த ஒரு விபத்தில் கால் இழந்த புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பெரியார் நகரைச் சேர்ந்த சுப்பையாஅழகி தம்பதியரின் மகன் வீரபாண்டி என்பவரை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தாயகம் மீட்டு வந்து ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவரை நேற்று முன்தினம் மருத்துமனைக்குச் சென்று நலன் விசாரித்து தேவையான மருத்துவ உதவிகள் கிடைக்க மருத்துவக் குழுவை கேட்டுக் கொண்டேன். இது போல தகவல்கள் கிடைக்கப்பெறுகின்ற இனங்களில் எல்லாம் விரைந்து நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

கடந்த ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பு நடத்தியபோது, உக்ரைன் நாட்டில் மருத்துவம் படிப்பதற்காக தங்கியிருந்த மாணவர்களை பாதுகாப்பான முறையில் அழைத்து வருவதற்காக போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் வாயிலாக 1,524 மாணவர்கள் அரசு செலவில் அழைத்து வரப்பட்டு மாணவர்களின் சொந்த ஊர்களில் அவர்களின் பெற்றோர்கள் வசம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டனர் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் உட்பட இந்தியர்கள் தகவல் தொழில் நுட்ப வேலை என்ற போர்வையில் கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் எல்லைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சட்ட விரோத இணையதள வேலைக்கு கட்டாயப்படுத்தி, மறுப்போரை துன்புறுத்தியதாகத் தகவல் கிடைக்கப் பெற்றதை அடுத்து ராஜாங்க ரீதியாக மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் விளைவாக 73 தமிழர்கள் தமிழ்நாடு அரசு செலவில் பத்திரமாக அழைத்து வரப்பட்டு அவர்களின் குடும்பத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டனர்.

**வெளிநாட்டில் சிக்கிய 1,685 பேர் மீட்பு**

பணிக்கு வெளிநாட்டிற்குச் சென்று அங்கு சிக்கிக் கொள்வோர், உடல் நலம் பாதிக்கப்படுவோர் மீட்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கும், வெளிநாடுகளில் எதிர்பாரா வகையில் இயற்கை எய்துவோரின் பூத உடல்களை கொண்டு வருவதற்கும், சுழல் நிதியாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1 கோடி தளபதியார் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதியைக் கொண்டு இதுவரையிலும் 1,685 நபர்கள் மீட்டு தாயகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். 323 பூத உடல்கள் கொண்டு வரப்பட்டு சொந்த ஊரில் குடும்பத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள செய்தியை பதிவு செய்ய விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் நலனில் முதலமைச்சர் அவர்கள், 'வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் தத்துவத்தின் அடிப்படையில் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் மறுவாழ்வு தேடி அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர்களின் நலனில் மாறாத பாசம் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசான தளபதியார் அவர்கள் 2782021 அன்று சட்டமன்றப் பேரவையில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள். ரூபாய் 30 கோடி செலவில் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படை வசதிகள் ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபாயில் அவர்களுக்கு துணிமணிகள், பாத்திரங்கள் வழங்குகின்ற நிலை, அதேபோல 10 கோடி ரூபாயில் முகாம், 5 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற மேம்பாடு, 321 சுய உதவிக் குழுக்களுக்கு 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 300 மகளிர் உதவும் சங்கங்களை புதிதாகத் துவக்கி சுழல் நிதி வழங்குதல், (குறுக்கீடு) தலைப்புகள்தான் சொல்கிறேன்.

பாரதப் பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு பெற இயலாதவர்களுக்கு ரூபாய் 7 கோடி செலவில், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், மேலும் இந்த ஆண்டு 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அந்த மானியம் வழங்கப்படுகிறது.

பட்டயப் படிப்பிற்கு ரூ.2,500/லிருந்து ரூ.10,000/ ஆகவும், இளநிலை கல்வி மற்றும் அறிவியல் பட்டப் படிப்பிற்கு ரூ3,000/லிருந்து ரூ.12,000/ஆகவும், இளநிலை தொழிற் கல்வி பட்டப் படிப்பிற்கு ரூ.5,000/லிருந்து ரூ.20,000/ ஆகவும் கல்வி உதவித்தொகையை உயர்த்தி முதலமைச்சர் அவர்கள் உத்தரவினை வழங்கி ரூபாய் 2 கோடியே 71 இலட்சம் விடுவிக்கப்பட்டு, இன்றைக்கு செயல்படுத்தப்படுகிறது.

முகாமிற்கு உள்ளேயும், வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்ட கால சவால்களுக்குத் தீர்வு காண ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் கூட்டங்கள் இதுவரை 5 முறை நடைபெற்றுள்ளன. சட்ட ஆலோசனைக் குழுக் கூட்டங்களும் தொடர்ந்து நடந்து வருகின்றன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மறுவாழ்வு மையங்களில் வீடுகள் புதுப்பிப்பு!**

மறுவாழ்வு முகாம்களில் சிதிலமடைந்துள்ள 7,469 வீடுகளுக்கு புதிய வீடுகள் கட்ட முதற்கட்டமாக ரூபாய் 177 கோடி செலவில், 3,510 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு, இப்பணிகள் அனைத்தும் முடிவடையும் நிலையில் உள்ளன. இந்த ஆண்டு மீண்டும் 3,500 வீடுகளுக்கு நிதியுதவி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிக்கும் அனைத்து மக்களுக்கும் உதவும் வகையில் ரூபாய் 196 கோடியே 83 இலட்சம் மதிப்பில், 40 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியும், 500 டன் ஆவின் பால் பவுடரும், 101 டன் உயிர் காக்கும் மருத்துவப் பொருட்கள் இலங்கைக்கு சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களிலிருந்து முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, அந்தப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

மறுவாழ்வு முகாம்களில் வசிக்கின்ற இலங்கை மக்களுக்கும், தாயகம் திரும்பிய தமிழ் மக்களுக்கும் தொடர்ந்து பல்வேறு நலத் திட்டங்களை செய்து வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு துறை சார்பாக நன்றியினைத் தெரிவித்து நேரத்தின் அருமை கருதி, அயலக தமிழர்களின் நலன் தொடர்பாக பின்வரும் அறிவிப்புகளை இந்த அவையில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதமுள்ளவற்றை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**அறிவிப்புகள்**

**பொது (மறுவாழ்வு)த் துறை**

1. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்கூடங்கள் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டுவரும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டு, அவர்கள் அதன்மூலம் தையற்கலை, பாரம்பரிய முறையில் உணவுப் பொருட்கள் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை அவர்கள் வசிக்கும் வீடுகளிலேயே செய்து வருகின்றனர். இதனால் அவர்கள் செய்யும் தொழில்கள்மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வதில் சுணக்கம் உள்ளது. அவர்களுக்கென தொழிற்கூடங்கள் (work shed) அமைத்துத் தரும் நேர்வில், அவர்கள் மேற்கொள்ளும் தொழிலினை சீரிய முறையில் செய்வதோடு, அதன்மூலம் பொருள் ஈட்டி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள இயலும். இதன்மூலம் அவர்கள் தொழில் முறையை ஒன்றிணைத்து, வணிகத்துடன் ஒருங்கிணைக்க ஏதுவான சூழல் ஏற்படும்.

முதற்கட்டமாக, 10 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, முகாம் ஒன்றுக்கு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்கூடம் என்ற வகையில் (அதன் நிலையான செலவுகள் உட்பட) 10 முகாம்களில் 3 கோடி ரூபாய் செலவில் 10 தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்.

2. இருநூறு புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் சுழல் நிதி வழங்கப்படும் நிலையில், அவர்களின் சுயசார்புத்தன்மை நிலைநிறுத்தப்படுவதுடன் அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர்கின்றது.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்படும் 321 சுய உதவிக் குழுக்களுக்கு "சமூக முதலீட்டு நிதியாக"தலா ரூபாய் 50,000/த்துடன் கூடுதலாக ரூபாய் 75,000/வீதம் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் 2021-2022-ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டது. மேலும், புதிதாக 300 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் ரூ.1.25 இலட்சம் சமூக முதலீட்டு நிதியாக 2022—2023-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், மேலும் 200 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றிற்கு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதம் 200 குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. சுய தொழில்புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு சுய தொழில் தொடங்க 2 கோடி ரூபாய் மூலதன நிதியாக ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சியில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரும் அதே வேளையில், சுய தொழில்புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேலும் மேம்படுத்தும். இலங்கைத் தமிழர் ஏராளமானோர் படித்தும், தகுதி இருந்தும் அவர்களின் சட்டரீதியான தகுதியின்மையால் வங்கிகளில் கடன் வாங்க இயலாத நிலையில், தினக்கூலி மற்றும் தங்கள் படிப்பிற்கு இணையில்லாத தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இலங்கைத் தமிழர்கள் சிறு மற்றும் குறு 5 தொழில்கள் தொடங்க மூலதன நிதி இரண்டு கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக வழங்கப்படும். இதன் மூலமாக ஆண்டுதோறும் சுழற்சி முறையில் தொழில்முனைவோர் தேர்வு செய்யப்பட்டு மூலதன நிதி வழங்கப்படும்.

4. 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்

இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சியளிக்க திட்டமிட்டு, கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூபாய் 9.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,000 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நடப்பு ஆண்டிற்கும் நீட்டிக்கப்பட்டு, 2023-2024-ஆம் நிதியாண்டில் மேலும் 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.

இதன் மூலம் கல்வி பயின்ற இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதுடன், அவர்களது பொருளாதார நிலையும் மேம்பாடு அடையும்.

**இணைய தளம்- கைபேசி சேவை**

5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்தில் வெளிநாட்டு வேலை வேண்டி வருபவர்களின் விண்ணப்பங்களை நேரடியாகப் பெற்று பதிவு செய்து வந்தது. அனைத்து தரப்பு மக்களும், தொலைதூர இடத்தில் இருப்பவர்களும் பயனடையும் வகையில் வெளிநாட்டு வேலைக்குச் செல்ல அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ள ஏதுவாக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை, தமிழ்நாடு அரசு தரவுதள மையத்துடன் (Government Data Centre) இணைந்து 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

வெளிநாட்டில் வசிப்பவர்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வழங்கும் சேவைகளை மேம்படுத்தவும் இந்த கைபேசி செயலி மற்றும் இருமொழி இணையதளம் உதவிபுரியும்.

**10 புதிய வங்கிக் கிளைகள்**

6. ரெப்கோ வங்கியில் 10 புதிய வங்கிக் கிளைகள் தொடங்கப்படும்.

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி) இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக நிறுவப்பட்டதாகும். தற்பொழுது, இந்த வங்கி 108 கிளைகளைக் கொண்டு தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இயங்கி வருகிறது.

இதில், 83 கிளைகள் தமிழ்நாட்டிலும், 10 கிளைகள் ஆந்திராவிலும், 1 கிளை தெலுங்கானாவிலும், 8 கிளைகள் கர்நாடகாவிலும், 4 கிளைகள் கேரளாவிலும், 2 கிளைகள் புதுச்சேரியிலும் உள்ளன. தாயகம் திரும்பியோர் அதிகம் வசிக்கும் இடங்களில் வங்கியின் வர்த்தகத்திற்கான வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 10 புதிய கிளைகள் தொடங்கப்படும். இதற்கான செலவினம் ரெப்கோ வங்கியால் மேற்கொள்ளப்படும்.

உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு இப்போது நான் தெரிவித்துள்ள விளக்கங்கள் திருப்தி அளிக்கும் என்று நம்புகிறேன். எனவே, உறுப்பினர்கள்கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்புடன்உங்களைக்கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சபையிலுள்ள அனைவருக்கும் நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் செஞ்சி மஸ்தான் உரையாற்றினார்.

---

### சென்னை, மதுரை, கோவை போன்ற நெருக்கடியான நகரங்களில்

## 20, 30 மாடிகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுமா?

### சட்டப்பேரவையில் கு.பிச்சாண்டி வினா!

*சென்னை, ஏப். 22 -*

*சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பதிலும் வருமாறு:*



**கு.பிச்சாண்டி** *(பேரவைத் துணைத் தலைவர்): வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியி ருப்புகள் கட்டுவதற்கு சென்னை போன்ற இடங்களிலெல்லாம் சரியான இடங்கள் கிடைக்காத ஒரு நிலை உள்ளது. கோயம்புத்தூர் ஆக இருந்தாலும், மதுரையாக இருந்தாலும் இதே நிலை தான் உள்ளது. ஆனால், மும்பை, டெல்லி போன்ற இடங்களிலெல்லாம் இருக்கின்ற இடத்திலேயே, 20 மாடிகள் அல்லது 30 மாடிகள் என கட்டி, அதிகளவு வீடுகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். நிலமில்லாத இந்த நிலையில், இப்படிப்பட்ட நெருக்கடியான நகரங்களிலே 20 மாடிகள் அல்லது 30 மாடிகள் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி மக்களுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் சு.முத்துசாமி:** *உறுப்பினர் அவர்கள் சொன்னது ஒரு சரியான நடவடிக்கை தான். ஆனால் நமக்கு நடைமுறையிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், ஏற்கெனவே கட்டிய வீடுகளே இன்னும் ஒரு 8 ஆயிரம் வீடுகள் விற்காமல் இருக்கின்றன. அதன்காரணமாக, எங்கு அவசியம் என்பதை மிகத் தெளிவாக ஆய்வு செய்து செய்ய வேண்டுமென்று கருதுகிறோம். ஆனால், கோவை மாநகரம், போன்ற பகுதிகளில் அவர்கள் சொல்லுவது ஒரு நியாயமானது. அதற்கான ஆலோசனையைச் செய்யலாம். நடவடிக்கை எடுக்கலாம்.*

*இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பதிலளித்தார்.*

---

### பழுதடைந்த நிலையிலே, இருக்கிற குடியிருப்புகளை அகற்றி

## சேலம் - அய்யந்திருமாளிகைப் பகுதியில் புதிய குடியிருப்பு கட்டப்படுமா?

### சட்டப்பேரவையில் இரா.இராஜேந்திரன் கேள்வி!

*சென்னை, ஏப். 22 -*

*சட்டப்பேரவையில் சேலம் சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பதிலும் வருமாறு:*



**இரா.இராஜேந்திரன்:** *சேலம் மாநகரத்திலே அய்யந்திருமாளிகைப் பகுதியிலே வீட்டு வசதி வாரிய குடியிருப்பு உள்ளது. இந்த குடியிருப்புகள் கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்த குடியிருப்புகள் பழுதடைந்த நிலையிலே இருக்கிற ஒரு சூழ்நிலையிலே, அவற்றை அகற்றி விட்டு, புதியதாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் சு.முத்துசாமி:** *குடியிருப்புகள் இரண்டு விதமாக இருக்கின்றன. ஒன்று வாடகைக்கு விடப்பட்டிருக்கிற குடியிருப்புகள். அது வாரியத்துடைய கட்டுப்பாட்டில் இருக்கும். மற்றொன்று, ஏற்கெனவே ஒரு 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் விற்கப்பட்டவை. அவைகளும் பழுதடைந்து, தற்போது அவர்களும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.*

*முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டையும் உடனடியாக சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே சேலமும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் சு. முத்துச்சாமி பதிலளித்தார்.*